1971 ஜூன் 24]

திருமதி. த. ந. அனந்தநாயகி : சீரணித் தொண்டர்கள் இலவசமாகச் சேவை செய்கிறார்கள் என்று சொல்லும் அதே நேரத்தில் அவர்களுக்கு தினம் மூன்று ரூபாய் செலவாகிறது என்பது உண்மையா? என்ன செலவு ஆகியிருக்கிறது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கடந்த நான்காண்டுக் காலத்தில் சீரணித் துறை மூலமாக நிறைவேற்றப்பட்டுள்ள பணிகளின் மதிப்பு ரூ. 1,09,79,947 ஆகும். இதிலே அரசாங்கம் ஏற்றுக்கொண்டது ரூ. 41,61,156 ஆகும். இந்தச் செலவு நிறைவேற்றப்பட்ட பணிகளுக்கான சாமான்கள் வாங்கவும், சீரணித்தொண்டர்களுக்கு உணவு அளிக்கக்கூடிய வகையிலும் ஆகியிருக்கிறது. ஆகவே, சீரணி மூலமாகப் பெறப்பட்ட உழைப்பின் மதிப்பு ரூ. 68,18,791 ஆகும். அந்தத் தொண்டர்களுக்கு உணவு அளிப்பதைப்பற்றி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் அடிக்கடி சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். நாள் பூராவும் வேலை செய்யும் அவர்களுக்கு உணவுக்காக செலவாவதைப் பெரிது படுத்தாமல் அவர்களுடைய உழைப்பை மனிதாபிமானத்துடன் பாராட்ட வேண்டும்.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, சீரணித் தொண்டர்கள் கிராமப் புறத்திலே அபிவிருத்தி வேலைசெய்கிற காரணத்தால், சீரணித் தலைவர்களையும் மாவட்ட அபிவிருத்தி மன்ற கூட்டத்தில் அங்கம் பெற வழி வகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, அது பற்றி பரிசீலிக்கப்படும்.

* 39 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether financial assistance has been sought for from the Union Government to run the Prosperity Brigade during 1969–70–71; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, சீரணித் திட்டம் செயல்படுத்த மத்திய அரசிடமிருந்து எந்த விதமான நிதி உதவியும் மாநில அரசு கோரவில்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, சீரணிப்படைக்கு தமிழக அரசு கடந்த ஆண்டு எவ்வளவு ரூபாய் செலவிட்டது என்று அமைச்சரவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : நான் ஏற்கெனவே கூறிய பதிலில் சொல்லியிருக்கிறேன். கடந்த ஆண்டு மட்டும் 19 லட்சம் ரூபாய் சீரணிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கணபதி : தலைவரவர்களே, சீரணித்தொண்டர்களை அரசாங்க அலுவலகங்களில், அரசாங்க உத்தியோகங்களில் நியமிக்கும் நேரத்தில், ராணுவ வீரர்கள் போன்றவர்களுக்கு முதலிடம் தரப்படுவது போல், சீரணித் தொண்டர்களுக்கும் பிரப்பரன்ஸ் (preference) தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1971 ஜூன் 24

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, அந்த விதமான ஒரு திட்டம் எதுவும் இல்லை. ஆனால் கனம் உறுப்பினர் தெரிவித்த கருத்தை நினைவில் கொண்டு அரசு அதற்கு எதிர் காலத்தில் ஆவன செய்யவும்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, சேரணியினருக்கு படி ரூ. 3 கொடுக்கிறார்களா என்று உறுப்பினர் அனந்தநாயகி கேட்டார்கள். ஆனால் அமைச்சரவர்கள் 2-3 ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார்கள். உண்மையிலே அந்தச் சேரணித் தொண்டர்களின் கையில் பணமாகக் கொடுப்பதில்லை. வேலை செய்தால் அந்தந்தப் பகுதியில் இருக்கும் அதிகாரிகள் உணவு கொடுக்கிறார்கள். காசு கொடுப்பதில்லை என்பது அரசுக்கு தெரியுமா என்று அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, கனம் உறுப்பினர் தெரிவித்த கருத்துப்படி பதில் சொல்லப்பட்டிருக்கிறது. உணவுக்காகத்தான் அந்தப் பணம் செலவிடப்படுகிறது. அதையும் சில பேர் விரும்பி வாங்குவதில்லை. சிலபேர் முழு நேரத்திற்கு பணியாற்றுகிறார்கள். ஆனால் யாரும் பலவந்தமாக கொடுக்கவேண்டுமென்று கேட்பதில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த சேரணிப்படையின் கீழ் வேலை செய்யும் தொண்டர்களுக்கு உணவாக கொடுப்பது நல்ல விஷயம் தான். ஆனால் சில ஸ்கீமில் முடியாத காரணத்தால் காண்டிராக்ட் விடுவதாகத் தகவல் வந்து இருக்கிறது. இது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, அப்படி ஒரு வினை வதந்தியை கிளப்பிவிட்டு இருக்கிறார்கள் சில பேர். திட்டவட்டமான குறை தெரிவிக்கப்படுமானால் அது பற்றி அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும்.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, சேரணிப்படை தளபதிகளுக்கு மாத ஊதியம் ஏதாவது கொடுக்கப்படுகிறதா, அப்படி மாத ஊதியமாக கொடுக்கவில்லை என்றால் வேறு என்ன சலுகை அளிக்கப்படுகிறது என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் . தலைவரவர்களே, ஏற்கெனவே சொல்லிவிட்டேன், உணவுக்காகத்தான் பணம் செலவிடப்படுகிறது என்று. வேறு எந்தவிதமான சலுகையும் கொடுப்பதில்லை.

திரு. முனு ஆதி : தலைவரவர்களே, இந்த சிறப்பான திட்டம் அறிஞர் அண்ணா அவர்கள் உண்டாக்கிய திட்டம், சேரணித் திட்டம். மத்திய அரசு துவக்க இருப்பதாக சமீபத்தில் பத்திரிக்கையில் பார்த்தேன். அப்படி ஏதேனும் குறிப்பு கேட்டு மத்திய அரசிலிருந்து மாநில அரசுக்கு கடிதம் வந்திருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

1971 ஜூன் 24]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, மத்திய அரசிலிருந்து வேறு சில மாநிலங்களில் இந்தத் திட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவரவேண்டுமென்பதற்காக விவரம் கேட்டு இருக்கிறார்கள் என்று ஏற்கெனவே தெரிவித்து இருக்கிறேன். எந்தெந்த மாநிலத்தில் துவக்கப்பட்டிருக்கிறது என்பதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இந்தச் சீரணியில் சிண்டிகேட்காரர்களும் இருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அவர்களுக்கும் சாப்பாடு போடப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, சிண்டிகேட்காரர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் சேர்த்துத்தான் எல்லா விதமான சலுகையும் அளிக்கப்படுகிறது.

திரு. செ. கந்தப்பன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதலிலே தனது பதிலில் இதற்கு டெல்லியிடமிருந்து உதவி ஏதும் கொடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இது காந்தியின் நிர்மாணத் திட்டம் போன்றதே என்பதாலும், டெல்லி அரசு இந்த திட்டத்தின் பயனை மற்ற மாநிலங்களில் அறிமுகப்படுத்தும் நோக்கம் தென்படுவதாலும், இது போன்று பல்வேறு திட்டங்களுக்கும் காந்தியின் பெயரால் நடக்கும் வேறு பல திட்டங்களுக்கும், டெல்லி அரசு கோடிக் கணக்கில் பணம் ஒதுக்கீடு செய்கிறது. இந்த நிலைமைகளைச் சுட்டிக்காட்டி, நமது அரசு டெல்லி அரசிடமிருந்து உதவி பெற முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களின் யோசனையை அரசாங்கம் நினைவில் வைத்து எதிர்காலத்தில் அவ்வாறு செய்ய முயற்சிக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், சீரணிப்படையில் சிண்டிகேட்காரர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி இருப்பவர்கள் ஊதியம் வாங்காமல் உழைக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, ஊதியம் யாருக்கும் கொடுப்பது இல்லை என்று சொன்னேன். சிண்டிகேட்காரர்களுக்கு மட்டுமல்ல, எந்த கட்சிக்காரர்களாக இருந்தாலும் பணம் கொடுப்பது இல்லை. ஆனால் அம்மையாருக்கு எப்போதுமே, சாப்பாடு, சாப்பாடு என்பதுதான். அந்தச் சாப்பாடும் உழைப்பிற்குத்தான், அதை சிண்டிகேட்காரர்களும் பெற்றுக்கொள்கிறார்கள் என்று மீண்டும் வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். சிண்டிகேட்காரர்கள் என்று சொல்லக்கூடாது என்று சென்ற முறை இந்த அவையில் தீர்ப்பளிக்கப்பட்டது. அதற்கு பதிலாக

நிஜலிங்கப்பா தலைமையின்கீழ் இயங்குகின்ற காங்கிரஸ் என்று கூறவேண்டுமென்று சொல்லப்பட்டது. இப்போது அதுவும் போய் சாதிக் அலி தலைமையின் கீழ் இயங்குகின்ற காங்கிரஸ் (அப்பா மூச்சு வாங்குகிறது) என்று சொல்லப்படுகிறது. இப்போது அம்மையார் அவர்களே சிண்டிகேட் காரர்கள் என்று சொல்லுகிருர்கள். எனவே, அவர்களே கூடாது என்று சொன்னதை அவர்களே சொல்லலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை. அம்மையார் அவர்களுக்கே இல்லாத கவலை உங்களுக்கு ஏன் வந்தது என்று தெரியவில்லை. (சிரிப்பு)

திரு. கே. என். குமாரசுவாமி : தலைவரவர்களே சிரணியின் மூலம் வேலை செய்வதால் அரசுக்கு லாபமா? மொத்தமாக இது வரையில் சிரணிக்கு என்று ஒதுக்கப்பட்ட பணம், உணவுக்காக செலவிட்ட பணம் இவற்றிற்கெல்லாம் கணக்கு வைத்து இருக்கிருர்களா? சிரணியால் பலன் உண்டா, நஷ்டமா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே இந்த திட்டம் நல்ல லாபமான முறையில் செயல்படுகிறது. அது மட்டுமல்ல. மாவட்ட அளவில் கலெக்டர் அதற்கு காப்பாளராகவும், அவருடைய பி.ஏ. செயலாளராகவும் இருந்து வருகிருர்கள். அவர்கள் இதற்கு கணக்கு வைத்து திட்டங்களுக்கு இவ்வளவு செலவிட வேண்டுமென்ற அடிப்படையில் பணியாற்றி வருகிருர்கள். சிரணியால் லாபம் மட்டுமல்ல. காந்திய திட்டத்திற்கு இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் உயிர் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை எல்லை காந்தி போன்ற பெரிய தலைவர்களும் சர்வோதயத் தலைவர் ஜெயபிரகாஷ் நாராயணன் போன்ருேரும் பாராட்டி இருக்கிருர்கள்.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I want to make a submission. Questions bearing Nos. 40, 41, 42 and 43 relate to the same subject-matter and hence, they may be taken up together.

MR. SPEAKER : The hon. Member wants that they should be clubbed together. If they relate to the same subject, they may be taken up together.

ஆனால், வெவ்வேறு கேள்வியாக இருக்கிறது. ஒன்று தஸ்தூர் கமிட்டி பற்றியது. மற்ருென்று நில ஆர்ஜிதம் பற்றியது. மற்ருென்று கார்பரேஷன் நிறுவுவது, இப்படி ஒரே மாதிரியான கேள்வியாக இல்லை. தனியாக இருப்பது நல்லது.

THIRU K. T. K. THANGAMANI : All the questions are about the same subject.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் விரும்பினுல் எனக்கு ஆட்சேபணை இல்லை.